# எழுத்தாளன்

தமிழ் எழுத்தாளர்களின் சொந்தப் பத்திரிகை

EZHUTHALAN WRITERS OWN PUBLICATION

TAMIL & ENGLISH MONTHLY

FORMERLY THE WRITER

ஆசிரியர் அ.வெ.ர. கிருஷ்ணசாமி


உலகமெனும் பெருவியப்பை
உலகில் மாந்தர்
உயிர்வாழத் துடிக்கின்ற
முனைப்பில் தோன்றுங்
கலகத்தைச், சிறுபிணக்கைக்
காதல் என்னும்
கவினுறும் இன்பத்தைக்
கூடி வாழும்
நிலைபேற்றை நிதம் ஆய்ந்து
ஆய்ந்து மற்றும்
நினைவயர்ந்து குமைகின்ற
மானுடத்தின்
குலமுயரக், குணமுயரக்
கொடிதான் ஏந்துங்
குறிகொண்ட எழுத்தாளர்
ஓர் குலத்தார்.


கனவு 10 கற்பனை 11] திருச்சி 15—11—67 [ தனிப் பிரதி 25 கா


# சிந்தனைக்கு....

சீமான் ஒருவருக்கு ஐந்து குமாரர்கள். அரும்பாடுபட்டு சொத்து சேர்த்தார். எச்சல் கையால் காக்காய் ஓட்டமாட்டார். ஓட்டுர்போது தன் கையில் ஒட்டியிருக்கும் சோறு காக்காய்க்குப் போய்விடும் என்பது அவர் நினைப்பு. தானும் சரியாக சாப்பிடமாட்டார். அவருக்கு வியாதி வந்துவிட்டது அதற்கு மருந்து சாப்பிட அவர் விரும்பவில்லை. தன் குழந்தைகளுக்கு தான் சேர்த்து வைத்திருக்கும் செல்வம் குறைந்து போய்விடும் என்று கருதினர். எனக்காக பைசா செலவிடக்கூடாது என்று சொல்லிவிட்டார். அவர் அருகே ஐந்து குமாரர்களும், அவர்களின் குடும்பத்தாரும் கண் விழித்துக் காத்திருந்தார்கள். ஒரு நாள் அவர் கட்டையைப் போட்டுவிட்டார்.

ஐந்து சகோதரர்களுக்குள் பாகம் பிரிப்பது பற்றி உடனே சர்ச்சை எழுந்தது. சவத்தை வீட்டில் போட்டுக்கொண்டு சர்ச்சையில் இறங்கிவிட்டார்கள். ஒருநாள் இரண்டுநாள் ஆனது. சவம் நாற்றமெடுக்க ஆரம்பித்தது. அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் மத்தியஸ்தம் செய்து ஒருவாறு சவ அடக்கத்தை செய்து முடித்துவிட்டார்கள்.

வருடம் ஒன்று ஓடிவிட்டது. நீத்தார் நினைவுநாள் வந்தது. சகோதரர்களுக்கும் நினைவு வந்தது. ஒரு வருடம் ஆகியும் இன்னும் சமாதானம் ஏற்படவில்லையே என்ற நினைவு வந்ததே ஒழிய தந்தையைப்பற்றி நினைத்தவர்கள் அல்ல.

சீமான் மாளிகைக்கு அருகில் ஒரு பரதேசி. அதிகம் பேசமாட்டார். எங்கும் போகமாட்டார். யாராவது கொண்டுவந்து உணவு கொடுத்தால்தான் உண்டு. இல்லாவிட்டால் பட்டினி தான். அவரும் இறந்து ஒருவருடமாகிவிட்டது. யாரோ சிலர் வந்தார்கள். சாமியாரை சமாதியில் வைத்தார்கள். நினைவுச்சின்னம் எழுப்பினார்கள். சமாதியில் தினசரி விளக்கு எரிகிறது. குருபூஜையும் சிறப்பாக நடைபெற்றுவருகிறது.

ஐந்து குமாரர்களைப்பெற்று சொத்து சேர்த்துவைத்த சீமான் வாழ்வும், கொடுத்தபிச்சையை ஏற்று யாருமில்லாத அனாதையாக செத்த பரதேசி வாழ்க்கையும் சிந்தனைக்கு உரியது. இதனை சிந்தித்தால், சித்தம் தெளியும், சுகமும் தெரியும்.

—ரெட்டியார்

### திருச்சித் தமிழ் எழுத்தாளர் சங்க

# 12-ஆவது தமிழ் இலக்கிய மாநாட்டில் நிறைவேறிய தீர்மானங்கள்

1. தமிழ் வளர்ச்சி, ஆக்கத்திற்கு தமிழகஅரசு செய்யும்சேவையை மாநாடு பாராட்டுகிறது.

2. தமிழ் சமுதாயத்தின் தெளிவான வரலாற்றை ஆராய மூத்த தமிழறிஞர், எழுத்தாளர் பிரதிநிதிகள் கொண்ட ஆய்வுக் குழுவொன்றை தமிழக அரசு அமைக்க வேண்டும். இத்தீர்மானத்தை திரு. ந. விசுவநாதம் முன்மொழிய திரு. மாறன் வழிமொழிந்தார்.

3. தமிழ்ச் சொற்களை தமிழ் எழுத்துகளுக்குப் பதிலாக தேவநாகரியில் எழுதலாம என்று வடக்கில் இருந்துவரும் குரலுக்கு தமிழ் எழுத்தாளர்கள் தங்கள் கடுமையான எதிர்ப்பைத் தெரிவிக்கிறார்கள். தமிழ் எழுத்துக்களின் அமைப்பு ஒவ்வொன்றிலும் சொற்களின் நுணுக்கங்கள், தமிழ்ப் பண்பாடு அத்துணையும் பொருந்தி இருக்கிறது. அதனை மாற்ற தமிழ் எழுத்தாளர்கள் ஒருக்காலும் சம்மதிக்கமாட்டார்கள் என்பதை இம்மாநாடு தெரிவித்துக் கொள்கிறது.

இத் தீர்மானத்தை திரு. பி ராமச்சந்திரன் முன் மொழிய திரு. டி. எஸ். மணி வழிமொழிந்தார்.

4. உலகத் தமிழ் இரண்டாவது மாநாட்டைத் தமிழகத் தலைநகரில் நடத்த, தமிழக அரசு முன் வந்திருப்பதற்கு மாநாடு வரவேற்பு தெரிவித்துக் கொள்கிறது. கல்லூரி பட்டம்பெற்றவர்கள் கல்லூரிகளின் பிரதிநிதிகளாக இந்த மாநாட்டிலே கூடி தமிழின் வளத்தைப் பற்றி சிந்திக்கும் வாய்ப்புக்கு மகிழ்ச்சி கொள்கிறது. அத்துடன் பிற தமிழ் அமைப்புகளுடன் தொடர்பு கொண்டுள்ள பட்டம் பெறாத தமிழ் அறிஞர்களும் இந்த கருத்தரங்குகளில் பங்கு பெறும் வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும் என்று கோருகிறது.

இத்தீர்மானத்தை திரு. கமலபதி முன்மொழிய திரு. ராமமூர்த்தி வழிமொழிந்தார்.

.5 மலிவு விலையில், குறைந்த தரத்தில் வெளியாகும் புத்தகங்களின் எண்ணிக்கை பெருகிவரும் வருந்தத்தக்க நிலை, உயர்ந்த எழுத்துக்களின் வளர்ச்சியை மிகவும் பாதிப்பதாக உள்ளது. இந்த நிலை வளர்ந்தால் நல்ல குறிக்கோள்களைக் கொண்ட எழுத்தாளர்கள் வாழக்கூடிய தன்மையே மாறிவிடும் என்பதால், மட்டரக வெளியீடுகளை மட்டுப்படுத்த அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும் என்று விரும்புகிறது.

இத்தீர்மானத்தை திரு. பி. எஸ். கிருஷ்ணசாமி முன்மொழிய, திரு. பி. எஸ். ராமச்சந்திர ராவ் வழிமொழிந்தார்.

6. சங்கீத நாடகக் கலைஞர்களுக்கு புகைவண்டிப் பிரயாணச் சலுகை வழங்கியிருப்பது போல், இலக்கிய நிகழ்ச்சிகளில்பங்குபெறச் செல்லும் எழுத்தாளர்களுக்கும் மத்திய அரசு பிரயாணச் சலுகை வழங்க வேண்டும் என்றும், அதற்கு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் தமிழக அரசை இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

இத்தீர்மானத்தை திரு. டி எஸ். எம். சுந்தரம் முன்மொழிய திரு. பி. கோபாலன் வழிமொழிந்தார்.

7. எழுத்தாளர்களுக்கு அவர்களின் உழைப்பின் பயனாக கிடைக்கவேண்டிய தகுதி ஊதியத் தொகை (ராயல்டி) நியாயமான வகையில் கிடைக்கவும் எழுத்தாளர்கள் பயனடையத்தக்க முறையிலும் தகுந்த ஒழுங்கு விதிகளைச் செய்யும்படி தமிழக அரசை இம் மாநாடு வேண்டிக் கொள்கிறது.

இத்தீர்மானத்தை திருமதி.ராஜம் கிருஷ்ணசாமி முன்மொழிய, திருமதி. ராதிகா வழிமொழிந்தார்.

8. தமிழ்மறை தந்த திருவள்ளுவரின் இரண்டாயிரமாவது ஆண்டு விழா மிகவிரிவான முறையில் தமிழகமெங்கும் கொண்டாடுவதற்கு தமிழக அரசையும் தமிழ் மன்றங்களையும் தமிழ் மக்களையும் இம் மாநாடு பணிவுடன் கேட்டுக் கொள்கிறது.

இத்தீர்மானததை திரு. கோ. வன்மீகநாதன் அவர்கள் முன்மொழிய, திரு. சொ. கிருஷ்ணன் அவர்கள் வழிமொழிந்தார்.

9. உலகத்திற்குச் சீரிய அறத்தைப் போதிக்கும் திருக்குறள் பாரத தேசீய நூலாக ஏற்றுச் சிறப்பிக்க வேண்டும் என்று மத்திய அரசை இம்மாநாடு வேண்டுகிறது. திருக்குறள்பாரதப்பண்பாட்டிற்கும் ஒருமைப்பாட்டிற்கும் பெரிதும் துணைபுரிகிறது என்பதாலே அதனை தேசீய நூலாக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று மத்திய அரசை இம்மாநாடு வேண்டுகிறது.

இச்சீரிய முயற்சிக்கு தமிழக அரசும் தக்க முயற்சிகள் எடுத்து விரைவில் நிறைவேற பரிந்துரை செய்ய இம்மாநாடு வேண்டிக் கொள்கிறது.

இத்தீர்மானத்தை திரு. இள முருகு பொற்செல்வி அவர்கள் முன்மொழிய, திரு. கி. ர. சண்முகம் அவர்கள் வழிமொழிந்தார்.

## நீயிருக்கும்போது....

—திருச்சி பாரதன்

**எடுப்பு**

நீயிருக்கும் போது துயரில்லையே-உன்
நினைவிருக்கும் போது பயமில்லையே (நீ)

**தொடுப்பு**

வாய்மணக்கும் செந்தேன் தமிழ்த்தெய்வமே-நல்
வாழ்வளிக்கும் உண்மை அருள்வடிவமே (நீ)

**முடிப்பு**

பாயிசைத்தால் மயிலின் நடங்காணுவேன்
பகைவளர்ந்தால் வேலின் சுடர்நாடுவேன்
நானெனும் தனிமை நிலைமாற்றுவேன்
ஞானதேசி காஅருகே வாவடிவேலவா (நீ)

எழுத்தாளன்

கனவு 10 | பிலவங்க, கார்த்திகை (15-11-67) | கற்பனை 11

# அதிகாரிகள் கவனத்திற்கு

கணவனிடம் பொய்யே பேசாத மனைவி, எதையும் மறைத்து வைக்காத மனைவி. கணவனின் அனுமதி பெறுமல் எதையும் செய்யாத மனைவி. கணவனுக்குத்தெரியாமல் வீட்டை விட்டு வெளியே போகாத மனைவி, இத்தகைய பெண் தெய்வங்களுக்கெல்லாம் இப்பொழுது ஒரு சோதனை ஏற்பட்டிருக்கிறது.

ஏழு ரூபாய் கொடுத்து ஒரு ரசீது பெற்றுக்கொண்டால் இருபது ரூபாய் பெருமான பாத்திரம் நாற்பத்தைந்தாவது நாளில் கொடுக்கப்படும். இதைப்போல, பெரிய பாத்திரங்கள், பட்டுச்சேலைகள், டெர்லின் துணிகள், எவர்சில்வர் பாத்திரங்கள், நாற்காலிகள், மேஜைகள், பீரோக்கள் அத்தனையும் இம்மாதிரி சீட்டுகள் 5, 10, 15, 20, 30, 40 வாங்கினால் கொடுக்கப்படுமென்று புதிய வியாபாரம் ஒன்று திருச்சியில் ஒருவர் தொடங்கினர்.

இன்றுவரை போடப்பட்ட தொகைகளுக்கு சாமான்களும் வழங்கியிருக்கிறர். பெண்மக்களுக்கு பாத்திரம் மேலிருக்கும் ஆசையை பயன்படுத்தி, இவ்வியாபாரம், சொற்பமுதலீட்டில் அதிகப்படியான லாபம் அடையுங்கள் என்ற விளம்பரத்தை அறிந்து, கணவனுக்குத் தெரியாமல், தன் சொந்த நகைகளை அடகு வைத்து சீட்டு வாங்கியிருப்பவர்களும், கடும் வெயிலில் போய் க்யூவரிசையில் நின்று பணம் கட்டும் பெண்களின் போக்கு என்னவென்று சொல்வது ?.

அதிகாரிகள் தலையிட்டு விற்பனைவரி லைசென்ஸ் பெற வேண்டும் என்று சொன்னவுடன் லைசென்ஸ் பெற்று தொடர்ந்து வியாபாரம் நடைபெறுகிறது. இதைப் பார்த்து இப்பொழுது தெருவுக்கு ஒன்று, இரண்டு வீதம் இத்தகைய கம்பெனிகள் ஆரம்பமாகி விட்டன. இவை அனைத்தும் பெண்களின் பெயராலே ஆரம்பிக்கப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

மனைவியை, மக்களை இல்லத்தில் வைத்து அவர்களின் நலனுக்காக வெளியே சென்று உழைக்கும் கணவன். பண்டைத் தமிழ்மரபு விளங்க வாழ்ந்தவன். திருடன் மனைவி, சிறைக்கோட்டம் புகுவதில்லை. கொலைகாரன் மனைவி சிறைக்குப் போவதில்லை. ஆனால் இந்த வியாபாரம் என்றே ஒருநாள், எப்படியானாலும் மோசடியில் போய் தான் முடியவேண்டும் என்பதை பாத்திர சீட்டு போடுபவர்களும் மறந்துவிடவில்லை. கேட்பவர்களும் மறந்துவிட முடியாது. இத்தனை நெருக்கடியில் இந்த வியாபாரத்தை த மனைவியர் பெயரில் அவர்களை உரிமையாளர்களாக் ஆண்கள் நடத்துகிற போக்கைக்கண்டு, பண்பார்ந்த உள் ளங்கள் வருந்தாமல் இருக்க முடியாது.

பெண்கள் பெருவாரியாக ஆசையோடு கம்பெ தொடங்கிய முதல்நாளே நாம் சீட்டு வாங்கிவி டால் மோசடி நடக்கு முன்பு பத்திரம் நமக்கு கிடைத் விடும் என்று விழுந்தடித்துக்கொண்டு போய் பணம்கட் சீட்டு வாங்குகிருர்கள்.

ஒரு முறைகட்டி பாத்திரமோ, சேலையோ, நாற்கா களோ கிடைத்தவர்கள் உற்சாகமாக, மேலும், மேலு பெரிய தொகைகளாக கட்டிவருகிருர்கள்.

இதனை அரசாங்கம் உடனடியாக கவனித்து தடுத் நிறுத்தவேண்டும். அல்லது போதிய டெபாசிட் பெற் மோசடி நடைபெருமலிருக்க அரசாங்கம் அதிகாரிக கண்காணிப்பாளர்களாக அங்கு நியமிக்க வேண்டும். இ வரை மோசடி நடைபெறவில்லையே, எப்படி நடவடிக்கை எடுப்பது என்று சொல்வது தீ பிடிக்கட்டும் பிறகு அணை துக் கொள்ளலாம் என்று இருப்பது போலாகும் என்று எ சரிக்கிறேம்.

மோசடி என்று எப்படி சொல்வது? அதுதான் சொ படி கொடுக்கிருர்களே என்று கேட்பவர்கள் இருக்கிருர்கள் வேண்டாததற்கெல்லாம் பகுத்தறிவை போட்டு எ போடுபவர்கள் தயவு செய்து இதில் பகுத்தறிவைப்புகுத் சிந்தித்துப் பார்த்தால் முடிவில் மோசடி என்ற நிலைக்கு வ மல் இருக்க முடியாது. பல ஆயிரங்கள் இப்பொழு மோசடியாக இருப்பது, விட்டு வைத்தால் பல லட்ச கள் மோசடியாக வேண்டிய நிலை வந்தேதீரும். ஒ நவ யோக்கியமாக நடந்து கொண்டு வந்தாலும் தெருவுக் மூன்று, நாலு என்று ஆரம்பித்திருப்பவர்கள் பணத்தை சேர்த்துக் கொண்டு ஊரைவிட்டுக் கிளம்பி ஓடிப்போன என்னுவது என்பதை சிந்திக்க வேண்டும்.

இத்தனைக்கும் மேலாக நமது தமிழ்ப் பண்பாட்டுக் ஒவ்வாத, தன்கணவனுக்கு மறைத்து, கணவனிடம் பொ சொல்லி, அவன் அனுமதிபெருமல் வெளியில் சென் க்யூவரிசையில் நின்று பாத்திரங்கள் சேர்க்க பெண்க மனம்படும் ஆவல் இருக்கிறதே அது நமது நெடிய தமி மரபையே நாசமாக்கிவிடும். குடும்பத்துக்குக் குடும்பம் இ னல் பாசம்மாறி, வேதனை நிரம்பி நிற்கும் காலம் வந் விடும் என்று பொதுமக்களையும் எச்சரிக்கை செய்ய வே டியது தமிழ் எழுத்தாளன் கடமை என்பதை பணிவோ தெரிவித்துக் கொள்கிறேன்.

————

# ஒரு சாதாரண மனிதனின் சந்தோஷங்கள்

★

[ நையாண்டி பாரதி ]

எனக்குத் தெரிந்த - அல்லது, என்னைத் தெரிந்து வைத்திருக்கிற - நண்பர் ஒருவர் தமது பக்கத்திலிருக்கும் அன்பரிடம் 'இவரைத் தெரியுமா உங்களுக்கு?' என்று கேட்கிறபோது, அந்த நபர் 'தெரியாதே!' என்று சொல்லுவார்; அல்லது, அந்த அர்த்தத்தில் தலையை ஆட்டுவார்; அல்லது திருதிரு முழித்தல் செய்வார்! இது எனக்கு சாவசகஜ விஷயம். ஆனால், என்னைப் பற்றி ஏதோ கொஞ்சம் தெரிந்து வைத்திருக்கிற நண்பருக்கு அது ஏமாற்றமாக இருக்கும். 'என்ன, இவரைத் தெரியாது? இவரு தான் நம்ம அவரு! அதுவாக்கும் இதுவாக்கும்' என்று அறிமுக அளப்புகளில் ஈடுபடுவார். இது வீண் வேலை என்று எனக்குப்படும்.

உண்மையில், ரொம்பப் பேர் என்னைத் தெரிந்து வைத்திராது இருப்பதில் — அல்லது, நான் ரொம்ப நிறையப் பல பேர்களுக்கு அறிமுகம் ஆகாமல் இருப்பதில் - எனக்கு மிகுந்த சந்தோஷம் என்றுமே உண்டு. அதாவது, நான் புகழ் பெருமல், பப்ளிஸிட்டி எதுவும் அடையாமல், ஒரு 'ஹீரோ' ஆகிவிடாமல், அன்று இருந்ததுபோல் இன்றும் என்றும் ஒரு சாதாரண நபராக இருப்பதிலே தான் நான் மிகுந்த ஆனந்தம் கொள்ளுகிறேன்.

முயற்சிகள் செய்து அடைய முடியாமல் போய்விட்ட விரக்தியிலே 'சீசீ, இந்தப் பழம் புளிக்கும்!' என்று சொன்ன நரியார் பிள்ளையின் பிரதா இல்லை நான். முயற்சி எதுவும் செய்யாமலே, சும்மா இருந்த நிலையிலேயே இருந்து கொண்டு, இந்தச் சாதாரண நிலையே போதும் என்று, எல்லோரையும் எல்லாவற்றையும் வேடிக்கை பார்த்து மகிழ்கின்ற வெறும் பிள்ளையார் தான் நான்!

நான் ஒரு 'பெரிய மனிதன்' ஆக வேண்டும் என்ற ஆசை என் நெஞ்சை அரித்ததே இல்லை. நானும் எப்படியாவது புகழ் பெற வேண்டும் என்று விரும்பி இருந்தால் என்னென்னவோ செய்திருக்கலாம் தான். யாராவது ஒரு தலைவரைப் புகழ்ந்து, அவர் கூடவே திரிந்து, நாளடைவில் எனக்கென்று ஒரு தனி கவனிப்பைப் பெற்றிருக்கலாம். ஏதாவது ஒரு கட்சியில் சேர்ந்து, உள் குழப்பங்களை உண்டாக்கி, எனக்கு பக்கபலம் தேடிக் கொண்டு, நான் ஒரு குட்டித் தலைவராகச் செயல்புரிந்திருக்கலாம். அல்லது, நானே ஒரு கொடியைத் தூக்கிக் கொண்டு, 'அது ஒழிக! இது ஒழிக! இவன் ஒழிக! எவன் எவள் என்ன, எல்லாருமே ஒழிக!' என்று கோஷங்களைக் கூவிக்கொண்டு, ஆட்கள் சேர்த்து, அறிக்கைகள் விடுத்து, சொல்மாரி பொழிந்து, நாட்டையும் நாட்டினரையும் சதா உறுத்திக் கொண்டே இருக்கிற ஒரு தனித் தலைவர் ஆகியிருக்கலாம். 'சிசுபால தாசன்' என்று பெயர் வைத்துக் கொண்டு, தினம்தோறும் ஆயிரம் ஏச்சுக்கள் ஏசியே தீருவது என்று கங்கணம் கட்டிக் கொண்டு, மேடைகள் போட்டு வசை புராணங்களை முழக்கித் தள்ளி எல்லோரது கவனிப்பையும் பெற்றிருக்கலாம். அல்லது, சித்துக்கள் புரிவதாகச் சொல்லி எத்தித் திரியக்கூடிய தாடிச் சாமியாராக மாறியிருக்கலாம். பிறர் பணத்தைத் தாராளமாக உபயோகிக்கும் துணிச்சலை வளர்த்துக் கொண்டு, கலைத்துறை, பத்திரிகைத் துறை, புத்தகத் துறை எதிலாவது - அல்லது, எல்லாவற்றிலுமே! - பல வேலைத்தனங்கள் செய்து பிரபலம் பெற்றிருக்கலாம்.

ஐயா, இதெல்லாம் வேண்டாம் என்றால் கூட, - கன்னியாகுமரியிலிருந்து நடந்தே களைப்பில் இமயத்தை எட்டிப் பிடித்த தீரர்; தமிழ் நாட்டில் உள்ள கோபுரங்கள் ஒன்றைக்கூட விடாமல் அனைத்தின் மேலும் ஏறி, நின்று, ஆகாயத்தைப் பார்த்து 'ஆகா!' என வியந்த சூரர்; பகல் எல்லாம் படுத்துத் தூங்கி விட்டு இரவுகளில் விழித்து சுற்றுப் பிரயாணம் செய்த சாதனைக்காரர், இப்படி ஏதேனும் ஒரு வகையில் புகழ் பெற்றிருக்க முடியுமே!

புகழும் பெயரும் பெறவா வழி இல்லை; 'எத்தனையோ வழிகள் அண்ணே! எத்தனை எத்தனையோ வழிகள்!' என்கிறது என் மனம். ஆனால், சாதாரண மனிதனாக இருப்பதால் கிடைக்கக்கூடிய சந்தோஷங்களில் ஒன்றுகூடக் கிடைக்காது, புகழ்பெற்று, பலரின் கவனிப்பையும் பெறக்கூடிய 'பெரிய மனிதன்' ஆகிவிட்டால்.

ஒரு சாதாரண நபராக இருப்பதிலே நீர் என்ன சந்தோஷங்களைக் கண்டுவிட்டீர் என்று, ஒருவர் என்ன - மிகப் பலர் - என்னை நோக்கிக் கேள்விகள் எறியத் தயாராக இருப்பார்கள் என்பதை நான் அறிவேன். ஒரு சாதாரண மனிதனின் சந்தோஷங்களை ரொம்பப் பேர் அறியமாட்டார்கள் என்பதனாலேயே நான் இக்கட்டுரையை எழுத முன் வந்தேன்.

நான் தெருக்களில் நடந்து போகிறேன். நினைத்த இடங்களில் நிற்கிறேன். எல்லாவற்றையும் வேடிக்கை பார்க்கிறேன். சினிமாப் பட போஸ்டர்கள், பேனர்கள் பளிச்சென்று தெரிகிறபோது, நிதானமாகப் பார்த்து ரசிக்கிறேன். எதிரே அழகிகளோ, அலங்காரிகளோ வந்தால் தாராளமாகப் பார்த்து மனம் மகிழ்கிறேன். கண்ணை இழுக்கும் வசீகரமுடைய சிங்காரியாக இருந்தால், திரும்பிப் பார்க்கிறேன். வழியில் ஒரு சினிமாத் தியேட்டர் காணப்படுகிறது; படம் பார்க்கக் கும்பல் காத்து நிற்கிறது. இங்கு அப்படி என்ன அதிசயப் படம் நடக்கிறது என்று அறிந்து கொள்வான் வேண்டி, தியேட்டர் முகப்பை அடைந்து, அங்கே விளம்பரத்துக்காக எடுப்பாக வைத்திருக்கும் 'ஸ்டில் போட்டோ'க்களை வேடிக்கையாகப் பார்க்கிறேன். தெருவிலே நடக்கிறபோதே வேர்க்கடலையை அல்லது பெப்பர்மின்ட்டை வாயிலே போட்டுக் கொள்கிறேன ... ...

இப்படி எல்லாம் சிறு சிறு இனிமைகளைக்கூடக் கண்டு வியந்து ரசிக்கும் வாய்ப்பையும் வசதியையும் இழந்து விடுகிறார்கள் பிரபலங்கள், புகழர்கள், தலைவர்கள், ஹீரோக்கள் வகையரா.

அவர்களாலே தெருவிலே நடந்து போக முடியுமா? 'ஏய நம்ம அவரு!' 'ஏய் இவரு!' 'ஏஹே, இந்த ஸ்டாரு!' என்று பெருங்கும்பல் கூடி விடுமே. கும்பலைக் கூட்டுகிற அளவுக்கு ஸ்டாரோ, ஹீரோவோ இல்லாத பிரபலம் அல்லது புகழ் அல்லது பெரியவர் ஆக இருந்தால்கூட, நடந்து போனால், 'பாருமேன்! கஞ்சப் பயல்! நடந்து போறான். டாக்சியிலே போகப்படாது?' என்று பழிக்கப் பலர் காத்திருப்பார்கள். அவர், தெருவில் நடக்கும் சிங்காரிகளையும் ஒய்யாரிகளையும், பார்த்து விட்டால் போச்சு! அவரைப் பற்றி இஷ்டம்போல் எழுதவும் பேசவும் 'மஞ்சள் பத்திரிகைக்காரர்கள் ரெடியாக இருப்பார்கள்.

கடைசி பக்கம் பார்க்க

## திருச்சித் தமிழ் எழுத்தாளர் சங்க

# 12-ஆவது தமிழ் இலக்கிய மாநாடு

[ ப. கோபாலன் ]

22—10—67 ஞாயிறு உதயமானது. தேவர் மன்றத்தில் காலை 8 மணி அளவில் சிங்காரம் குழுவின் நாதஸ்வர இசை முழங்கிக் கொண்டிருந்தது. அன்று தேவர் மன்றத்தில் ஏதோ கல்யாணமோ என்று எட்டிப் பார்த்தால் உள்ளே பிரபல எழுத்தாளர்களும், எழுத்தாளர்களின் பால் கொணடுள்ள அன்பினாலும் எழுத்தின்மேல் கொண்டுள்ள பக்தியினாலும் மக்கள் சிறப்பாக திருச்சி நகர ரசிகப் பெருமக்கள் திரளாகக் குழுமியிருந்தனர். அன்று திருச்சி தமிழ் எழுத்தாளர்களின் 12-வது இலக்கிய மாநாடு என்று புரியவந்தது. காலை 9 மணிக்கு மாநாடு துவங்க இருந்தது. 9-30 மணிககு "வாணியருள் மாகவிஞர் நான்முகனும் சேர்ந்து" காட்சியளிக்கும் விழாவினுக்கு இறை வணக்கமாக சங்க அங்கத்தினர் திரு. ப. கோபாலன் அவர்கள் பண இசைத்தார். இறைவனை துதித்தபின் வரவேற்புக் குழுத் தலைவர் திரு. G. C. பட்டாபிராமன், B. A., அவர்கள் மாநாட்டின் தலைவரும் அனைத்திந்திய தமிழ் எழுத்தாளா பெருமன்றத்தின் துணைத் தலைவரில் ஒருவருமான தவத்திரு. குன்றக்குடி அடிகளார் அவர்களையும், விழாவைத் துவக்கி வைப்பவரும் அனைத்திந்தியத் தமிழ் எழுததாளர் பெருமன்றத்தின் துணைத் தலைவரில் ஒருவருமான உயர்திரு. மீ. ப. சோமசுந்தரம் அவர்களையும், சிறப்புச் சொற்பொழிவாற்ற வந்துள்ள அமிர்த திரு. திருலோக சீதாராம் அவர்களையும், மதுரை விவசாய கல்லூரியின் தமிழ்ப் பேராசிரியரான அமிர்த திரு. கோ. சங்கரராசன், M. A. அவர்களையும் மற்றும் நிகழ்ச்சிகளில் பங்கு கொள்ளும் கவிஞர்களையும், பட்டிமன்றத்தில் கலந்து கொள்ளும் பேரறிஞர்களையும் பாராட்டி வரவேற்றார். அதற்குப்பின் வரவேற்புத் தலைவர் உயர்திரு. மீ. ப. சோ.வை விழாவைத் துவக்கி வைக்கவும், திருவிளக்கேற்றி வைக்கவும் வேண்டினர். திரு மீ. ப. சோ. அவர்கள் திருவிளக்கை ஏற்றி வைத்துத் தாம் பேசும்பொழுது நாம் சங்க இலக்கியங்களில் இருந்து இன்று நம்முடைய மனத்தில் என்றும் வீற்றிருக்கும் கவிஞர் பாரதி அவர்கள் பற்றி சிறப்பாகக் குறிப்பிட்டார். பாரதி இன்றைய நிலையில் நின்று நேற்றைய நிலையில் இருந்த தன்மையும் இன்று உள்ள நிலையில் தாம் இருக்கும் நிலையையும், நாளை எப்படி நமது நிலை இருக்கும் என்பதனையும் மிகத் தெளிவாகக் கூறியுள்ளார். அந்த அடிச்சுவட்டை நாம் பின்பற்றினால் நிச்சயம் நலமும் முக்காலமும் அறிந்த ஞானியாகவும் வாழலாம். புரட்சிகரமான பாஞ்சாலி சபதத்தை படைத்த கவிஞர் இந்த முக்காலங்களையும் தெளிவாகக் கூறியுள்ளார். இந்த வம்சாவளியில் வந்துள்ளவர் என்று, என்றும் நாம் நினைக்க வேண்டும் என்று கூறி தனது பங்கினைச் சிறப்பாகக் குறிப்பிட்டார். அவர் விழாக் குழுவினரையும், விழாவைச் சிறப்பித்த மேலோர்களையும் போற்றி தலைவருக்கு நன்றியையும் தெரிவித்தார்.

அதற்குப்பின், தலைவர் தவத்திரு அடிகளார் அவர்கள் சீரிய கருத்துக்களையும், சிந்தனைகளையும் மிகச் சிறப்பாகக் கூறினர். அதிலிருந்து சில முக்கிய அம்சங்கள் "உலகாயுத உணர்சசி ஆன்மீகத்திலிருந்து உருவாகிய நோயின் காரணமாக தோன்றுவது; ஆசையை அடிப்படையாகக் கொண்டது. உலகாயத உணர்ச்சியைத தீர்த்துக்கொள்ள அனுபவிக்கும் வாய்ப்பினை இறைவன் கொடுத்திருக்கிறான். ஆனால் உலகாயத உணர்ச்சியை அனுபவிப்பதில் ஆட்பட்டிருக்கிற மனிதனை அனுபவிக்கும் நேரத்தில் நாம் தடுப்பதில்லை."

மேலும் அவர் "தமிழ்மொழி காட்டுமிராணடிமொழிஎன சொன்ன பெரியார் ஏன் கூறியிருக்க வேண்டும் என்றால் அவர் வளர்ந்த காலத்தில அவருக்கு அறிமுகப்படுத்தப்பட்ட இலக்கியங்கள காட்டுமிராண்டித்தனத்தைப் போதிக்கும் இலக்கியங்களேயாகும்; அந்த சமயம அப்பர் அடிகளைப் போன்றவர்கள் அறிமுகப்படுததப்படவில்லை. இது எதைக் காட்டுகிறது? பரிமாறியவனின் கோளாறே தவிர, பரிமாற்றத்தை ஏற்றுக்கொண்டவனின் கோளாறு அல்ல என்பதைக் காட்டுகிறது. ஆகவே எழுத்தாளர்கள் பரிமாறும் கருததைப் பொருத்துத் தாம மக்களிடத்தே மனமாற்றத்தை ஏற்படுதத முடியும" என்றும,

"தாய்மொழியின் மூலமாக விஞ்ஞானக் கல்வி நிச்சயமாக முன்னேற முடியும், மொழி உணர்ச்சியைப் புலப்படுத்தும் கருவி. சுலபமாக உணரும் கருவி வேறு. கடினமான முறையில் உணரும் கருவி வேறு; தாய்மொழியின் மூலம் உணருவது என்பது சுலபமான கருவி; பிற மொழிகளால் உணருதல் கடினமான கருவி. தமிழ் நாட்டுவரலாறுதற்போது அவசரமான ஒன்றல்ல மிகவும் அவசரமாக எழுத்தாளர்கள் செய்ய வேண்டிய பணி தமிழ்க் கருத்து வரலாறு. தமிழ் நூல்களில் காணக் கிடைக்கும். கருத்துக்கள் காலத்துக்குக் காலம் பழமைக்கும் புதுமைக்கும் போராட்டமின்றி எவ்வாறு இன்றைய மாறுதலைப் பெற்றிருக்கிறது என்பதை எழுத்தாளர்கள் எழுத வேண்டும்" என்று கூறி முடிவில் எழுத்தாளர்கள் கடந்த கால சிந்தனையோடு புதிய சிந்தனையை கலந்து மிக்க நுணுக்கமான போராட்டமில்லாத முறையில் கருத்துக்களைத் தூவ வேண்டும் மனித சமுதாயத்தினுடைய தலையெழுத்தை நிர்ணயிக்கும் பொறுப்பு எழுத்தாளர்களுடையது. நமமுடைய சமயம் விஞ்ஞானப் பண்புகளையுடையது" என்று சங்கத்தையும், விழாவுக்கு வந்திருப்போரையும், விழாவுக்கு பாடுபடும் எழுத்தாள சகோதரர்களையும் பாராட்டினார்.

இந்த நேரத்தில் தமிழ் மணம் வீசும் மாநாட்டில் வேற்று மாநிலப் பிரதிநிதிகளாக நால்வர்வந்திருந்தனர். தமிழின் ஆர்வத்தால். திரு. கோ. வன்மீகநாதன் அவர்கள் இந்நால்வரையும் விழாவில் அறிமுகப்படுத்தி இவர்கள் தமிழ் பயின்று வருகிறார்கள். நம் மாநிலத்தில் வந்து தமிழின் பெருமையைக் காண இந்த நேரம் சரியான நேரம் என்று கூறினர். வாரணாசியில், கணித ஆராய்ச்சியாளராக பணியாற்றும் ஸ்ரீ ரவீந்திர நாராயண் லால் ஸ்ரீ வாஸ்ததவ், எம். எஸ். ஸி., அவர்கள், நன்றி பல என்றும், தரியாபாத் ஹிந்தி ஆராய்ச்சியாளர் திரு. வித்யாதர் திவாரி எம். ஏ. (ஹிந்தி) அவர்கள நல்வணக்கம் என்றும், அலகாபாத் லைப் இன்சூரன்ஸ்ஸில் வேலை பார்க்கும் ஸ்ரீ கிருஷ்ணமிச்ர எச். ஜி. ஏ., அவர்கள் வணக்கம் பல என்றும் தூய தமிழில்தங்கள் நன்றியை தெரிவித்தனர். தமிழ் மக்களுக்கே வெட்கித் தலைகுனிய வைக்கும்படி லக்னோ செகரட்டேரியட், சுருக்

கெழுத்தாளர் திரு. ஜெகதீஸ் நாராயண் திவாரி பாரதியாரின் மேல் காதல்கொண்டு தான் ரசித்த "செந்தமிழ் நாடெனும் போதினிலே ... ..." என்ற பாட்டை இசையோடு பாடினர். அது ஒரு வியப்பாகவே மாநாட்டிற்கு தோன்றியது. பாரதி கூறிய "தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செய்வோம" என்ற சிந்தனை எப்படி நனவாகி வருகிறது என்று நினைத்தாலே பூரிப்பும், அமைதியும் மகிழ்ச்சியும் தென்பட்டது. அதற்குப் பின் தலைவர் அவர்கள் இந்நால்வர்களின் சீரிய முயற்சியைப் பாராட்டி சிறப்புச் சொற்பொழிவாளர்களான அமிர்த. திருலோக சீதாராம் அவர்களை "சில கவிதை" என்ற தலைப்பில் சீரிய உரையாற்றக் கேட்டுக்கொண்டார். கவிஞர் அவர்கள், ரகுநாதன், செந்தாமரை, ரெட்டியார், சக்தி சரணன், என். ராகவன், கவிஞர். சாமு இவர்களின் கவிதைகளை படித்து சிறப்புகளைச் சொன்னர். ஒரு கவிஞர் "விறகு எரிந்தது. விறகை தீ உண்டதா இல்லை தீ விறகினை உண்டதா" என்றும, இன்னொரு கவியின் இதயத்தில மண்ணின் வாழ் குடிசை மக்களின் வாழ்வின் துன்ப, இன்பங்களை மிகச் சிறப்பாக எடுத்துக் கூறி "பத்திரிகைகள கவிஞர்களை அறிமுகப்படுத்தவில்லை. பத்திரிகைகள நடத்துபவர்களுக்கு கவிதையைப் பற்றி தெரியாததால ஆற்றலற்றவையாக இருக்கின்றன" என்று கூறினர். அதற்குப் பின் சிறப்புச் சொற்பொழிவின் இரண்டாவது பேச்சாளரான திரு. கோ. சங்கரராசன், எம். ஏ, அவர்கள் "ஓர் கவிதை" என்ற தலைப்பில் பேசும்போது பல கவிஞர்கள் கவிதைகள் புனைந்தாலும் அவர்கள் எல்லோரும் "ஓர் கவிதை" தான் எழுதியுள்ளனர்.

கவிதைகளில் பல வேறுபாடுகள் தோன்றுகின்றன. ஆனல் கவிதைகளில் பொருள் ஒன்று தான் என்று சங்க இலக்கியங்களில் சில மேற்கோள் காட்டி தன் பேச்சை சிறப்பாக முடித்தார்.

அதற்குப் பின் பல தீர்மானங்கள் நிறைவேறின.

சங்கப் பொதுச் செயலாளர் திரு. பட்டுக்கோட்டை ஸி. பி. குமாரவேல் அவர்கள் மாநாட்டிற்கு வருகை தந்த பெரியோர்களையும் தாய்மார்களையும், அழைப்பை ஏற்று வந்து தலைமை தாங்கிய தலைவரையும் துவக்கி வைத்த பெருமகனரையும், சிறப்புச் சொற்பொழிவாளர்களையும் பாராட்டி நன்றி நவில காலை நிகழ்ச்சி நன்முறையிலும், ரசிகப் பெருமக்களின் ஆரவாரத்துடனும் இனிது முடிவடைந்தது.

மாலை நிகழ்ச்சி 4-30 மணிக்கு துவங்க இருந்தபோதும் ரசிகர்கள் வெகுநேரம் முன்பே வந்து காத்திருந்த காட்சி வர்ணிக்க முடியாது. மாலை நிகழ்ச்சியின் முதல் கட்டமான கவியரங்க ஆரம்பத்தில் சங்க துணைத் தலைவரில் ஒருவரான திரு. ஏ. எஸ். இராகவன அவர்கள் கவிதையிலேயே கவியரங்கில் பங்கு பெறுவோரையும், கூடியிருப்போரையும் வரவேற்றார். எங்கள் கவிஞர், இன்றைய கவிஞர் வரிசையில் தலைமகனாகத் திகழும் திரு. மீ. ப. சோ. அவர்கள் தலைமை தாங்கினர். விழாவில் பங்குபெறும் கவிஞர்கள் அனைவரையும் கௌரவிக்கும் வகையில் அவர்களுக்கு எங்கள் கவிஞர் திருலோகசீதாராம அவர்கள் பொன்னடைப் போர்த்தினர். தலைவர் அவர்கள் கவிஞர் பெருமக்கள் என்றுமே தங்கள் கருத்தினை திறம்பட, நயம்பட கூறத் தவறியதில்லை. அதே நேரத்தில் மதிப்புக்கும் புகழுக்கும் பெரும் துணை செய்து கவிஞர்களை ஊக்குவிக்கின்ற ரசிகப் பெருமக்களை என்றும் மறந்ததில்லை. ஆதலால் தான் "கலைவாணி, தான் இரண்டு அங்கமாக ஒன்று கவிஞராகவும் மறுபாதி ரசிகராகவும் காட்சியளிக்கிருள். இன்று நடைபெறும் கவியரங்கில் தலைப்பு ஒன்பான் சுவை. மனித உணர்ச்சிகளின் ஒன்பது ரசங்களையும உணர்ந்து கவியரங்கேற்றம் செய்ய வந்துள்ள எல்லா கவிஞரையும் பாராட்டினர். அப்பொழுது ரசிகப் பெருமக்கள் தங்கள் ஒப்புதலைக் கைதட்டி தெரிவித்து மதுரையில் சோமசுந்தரனர் தலைமை வகித்த பெருமையை நினைவுபடுத்துவதாகவே தோன்றியது. கவியரங்கத்தின் தொடக்கமாக "இளிவரல்" என்ற தலைப்பில் நமது கவிஞர் கு. க. நரசிம்மன், 'சக்திசரணன்' கவிமாலை கலைவாணிக்குச் சாற்றினர். தாழ்வு என்பது மனித சமுதாயத்தின் ஏக்கம என்ற கருத்தை வலியுறுத்தினர். பழனி இளங்கம்பன் அவர்கள் தன் இசையின் மூலமும், கவிதையின் மூலமும் இந்த உலகில் இறைவன் படைத்த ஒவ்வொன்றும் ஒரு வியப்பாகவே இருக்கிறது என்பதை நன்கு தெளிவுபட கவி புனைந்தார், 'வியப்பு' என்ற தலைப்பில். "பெருமிதம்" என்பது சாதாரண விஷயங்களிலிருந்தாலும் அது "வீரத்தையே காட்டும் பெருமிதமாக தோன்றுமபடி" கவிஞர் அரங்க சீனுவாசன் கவிதையினுல் இந்தப் "பெருமிதத்தை" மிகத் தெளிவாக அறிவுறுத்தினர். உலகிலே "காமம்" என்பது மனிதன் எந்த நிலையிலும் உள்ள ஒரு காதல், அன்பு என்று கொண்டாலும, ஒரு நங்கையை ஆடவன் கண்டால் அவள் பின் சுற்றுகிருன், சுற்றுகின்ற அவனை அவள் தன்பால் ஈர்க்கிருள் என்று மிக கச்சிதமாக தன் கவிதையில் வி. துரைசாமி, எம். ஏ., அவர்கள் அறிவுறுத்தினர். இயற்கையிலேயே "மனிதனுக்கு 'அச்சம்' உண்டு. அதைமிகைப்படுத்தி கூறியவர் கவிஞர் திரு. ந. செல்லப்பன் அவர்கள. இவையெல்லாம் எப்படியாயினும் மனிதன் 'அவலம்' என்ற நிலையை எண்ணவேண்டாமா? அதை கவிஞர் அயிலைத் தமிழ்ச் செழியன் அதி அற்புதமாக பாடினர். அவர் செல்வவந்தனுக்கு பசி இல்லை என்ற அழுகை, ஆனலோ செல்வமில்லாதவனுக்கு பசி வந்துவிட்டதே என்ற அழுகை என்று 'அம்மம்மா என்று கூறியது சபையிலே புத்துணர்ச்சியை ஊட்டுவதாகவும் அழுகையின் சிறப்பைக் கூறுவதுபோலவும அமைந்தது. அடுத்துதான் 'நகை' வந்தது. எத்தனைவித ரசங்களில் திளைத்தபோதும் மனிதனுக்கு வேண்டுவது இந்த 'நகையே' என்று கவிஞர் என். இராகவன் மிக சுருக்கமாகச் சொல்லி தன் கவிதையை முடித்தார். இந்த நிலையில், இத்தனை ரசங்களை அனுபவித்தவர்களுக்கு "சாது மிரண்டால் 'காடு கொள்ளாது' என்ற பழமொழியை உணர்த்துவதுபோல சாதுவான கவிஞர் ரெட்டியார் கோபமாக காட்சி தந்தார். அவர் தருமன் பொறுமையில் பற்றுகொண்டபோதும், அவன் கோபத்தைத் தஞ்சமென்ருன் பாரதப் போர் மூண்டது என்று நமது புராணங்களில ஏற்பட்டுள்ள பல சம்பவங்கள் இந்த கோபத்தால்தான் என்றும, மனிதர்களில் யமனுல் சாவோர் சிலர், ஆனல் கோபத்தால சாகுபவர்களோ அதிகம் என்றவுடன் சபையில் புன்சிரிப்பு எழுந்தது. அவர் 'புன்னகையே வேண்டாங்காண்' கோபம் வந்தால் உதடு துடிக்கும், நாககுளறும், கண்கள சிவக்கும், நரம்பு புடைக்கும் என்றும் ஆதலால் கோபத்தை விட்டால் அமரராகலாம் என்று ஆன்மீக தத்துவத்தையே தொட்டு கவிதை பாடினர். அதற்குப் பின் இவ்வளவு ரசனைகளிலும சிறந்தது 'அமைதி' என்று எங்கள் மூத்த கவிஞரும், முதியவருமான கலைவாணன் அவர்கள, மனிதன் சாவில் அமைதியை எதிர்பார்க்கிருன். இந்த ஆசாபாசத்தையும் உலக உணர்ச்சியையும் மறந்து உள்ளத்தால் வாழ்ந்தால் அமைதி ஏற்படும் என்று தன் கவிதையை ஒன்பான சுவையின் கடைசி சுவையாக பாடி முடித்தார். தலைவர் தன் பின்னுரையில் இந்தச் சங்கம் இந்த கவியரங்கப் பாடல்களை தக்க முறையில் புத்தகமாக்கி மனித சமுதாயத்துக்கருள வேண்டும்; ஏனனருல் அத்தனை கவிதைகளும் அவ்வளவு செழிப்பு மிகுந்தவையாக தோற்றமளித்ததாகவே கூறினர். அவர் கவிஞர்களை அறிமுகப்படுத்திய பாங்கு புதுமையாகத் தோன்றியது. துணைச் செயலாளர் திரு. திருச்சி பாரதன் அவர்கள் கவிதையில் நன்றி நவில கவியரங்கம இனிது முடிந்தது.

கடைசி பக்கம் பார்க்க

# இவர் முகம் வாடியிருப்பது ஏனோ?



இவர் அனுப்பிய தந்தி விரைவாக உரிய சமயத்தில் போய்ச் சேரவில்லை. காரணம், தபால்—தந்தி இலாகாவின் தவறாகயிருக்கலாம். அல்லது இவர் விலாசத்தை சரியாக எழுதாமல் இருந்திருக்கலாம்.

● அனுப்பும் செய்தி அதன் உரிய இடத்திற்கு விரைவாக போய்ச்சேரவேண்டும் என்பதற்காகத்தான் தந்தியடிக்கிறோம். அப்படி போய்ச் சேரவில்லையென்றால், தந்தியடிப்பது வீண்தானே ?

● தபால்-தந்தி இலாகா விரைவான விநியோகத்தில் கவனம் செலுத்துகிறது. அனுப்பும் கடிதங்களிலும் தந்திகளிலும் சரியாக முழு விலாசமிடுவது இன்றியமையாதது.

● எப்போதும் விரிவாக முழு விலாசத்தை எழுதுங்கள்—தபாலோ, தந்தியோ போய்ச் சேர வேண்டிய இடத்தை எளிதில் அறிய, விலாசத்தில், தபால் பிராந்திய எண்ணையும் குறிப்பிடுங்கள். தபால் பிராந்திய எண்ணை எழுதுவதால் நீங்கள் தனியாக கட்டணம் ஏதும் செலுத்த வேண்டியதில்லை.

**உங்களுக்கு சிறந்த முறையில் சேவை புரிய எங்களுக்கு உதவுங்கள்.**

**இந்திய தபால்-தந்தி இலாகா**

davp 67/105

## 4-ஆம் பக்கத் தொடர்ச்சி

நான் புகழ் பெற்றிருந்தால், பிரபலப்
பரிய மனிதன் ஆகியிருந்தால், தினந்
தாறும் மாலை நேரத்திலே ஆனந்த
ாக உலாவப் போக முடியாது; கடற்
ரை மணலில் அமைதியாக உட்
ார்ந்திருக்க முடியாது; மணலில்
டுத்துப் புரள முடியவே முடியாதே!
ன்னை வேடிக்கை பார்க்கப் பெரும்
ம்பலும், படம் பிடிக்க பத்திரிகை
ருபர்களும் சூழ்ந்து விடுவார்கள்.

நான் என்ன செய்கிறேன், என்ன
னைக்கிறேன், எங்கே போகிறேன்
ன்றெல்லாம் யாருமே கவலைப்படு
து கிடையாது. நான் ஒரு சாதா
ண மனிதனாக இருப்பதால் பெற்
ள்ள சௌகரியங்களில் இவையும்
லை.

ஒரு ஸ்டார் ஆகிவிடுகிறவரால், தலைவரால், பிரபலங்களால் இப்படிப்பட்ட சௌகரியங்களை அனுபவிக்க இயலாமல் போகிறது. பேட்டி காண வருகிறார்கள். கேள்விகளைக் கேட்கிறார்கள். அதைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? இதைப் பற்றி உங்கள் கருத்து என்ன? உங்களுக்கு என்னென்ன பிடிக்கும்? டொமட்டோவில் வைட்டமின் அதிகமா? பொட்டட்டோவில் அது அதிகமா? — இவ்வாறு சம்பந்தமுள்ளது இல்லாதது, அவசியமானது. அவசியமற்றது முதலியவற்றைப் பற்றி எல்லாம் அபிப்பிராயம் சேகரித்து வெளியிடப்படும். அவற்றை எதிர்த்து அநேகர் பேசுவார்கள். வேறு பலர் ஆதரித்துப் பேசுவார்கள். பிரபலங்கள் மறுப்பு அல்லது மழுப்பல் வெளியிட வேண்டிய தேவை தலையெடுக்கும். இந்த அச்சப்போர் மணியம் எல்லாம் என் பக்கம் தலைகாட்டவோ, வால் நீட்டவோ முன்வருவதில்லை.

பெண்கள் எத்தனைவது வயசில் கல்யாணம் செய்து கொள்வது நல்லது? கருத்தடைக்கு லூப் சிறந்ததா, 'ஓரல் பில்ஸ்' உகந்ததா, அறுவை சிகிச்சை தான் உயர்ந்ததா? நடிகைகள் உடலோடு ஒட்டிய இறுகல் உடை அணிந்து குதிப்பது அழகாக இருக்கிறதா? நவயுவதிகள் வயிற்றையும் முதுகையும், தோள்களின் வட்டாரத்தையும் வெளிச்சமிடுவதையும் தொப்புளைக் காட்டுவதையும் நாகரிக உயர்வு எனக் கருதுகிறார்களே, அது சரியா? — இது போன்ற 'முக்கியப் பிரச்னை'கள் குறித்து அறிக்கைகள் விடவேண்டிய அவசியமோ, அபிப்பிராயம் தெரிவிக்க வேண்டிய தேவையோ, 'ஆசிரியருக்குக் கடிதம்' எழுதும் துடிப்போ எனக்கு இல்லை. இந்த விதமான நாகரிகப் பரிணாமங்களை நன்றாகக் கவனித்து, நான் என்ன வேண்டுமானாலும் எண்ணிக்கொள்ள முடிகிறது. பார்த்து ரசித்து விட்டு, 'அய்யய்ய, இப்படியா நடந்து கொள்வது! ஆபாசம், அசிங்கம்' என்று பொதுநலம் கருதிப் பொய் சொல்ல வேண்டிய பெரிய மனுஷத்தனம் என்னை அணுகவேயில்லை.

நான் சாதாரண மனிதனாக இருப்பதால், எனக்கு இஷ்டப்பட்டபோது படுத்துத் தூங்குகிறேன்; தெருவில் சுற்றுகிறேன்; சும்மா இருக்கிறேன்; எதையாவது படிக்கிறேன்; என் மனசுக்குப் பிடித்த எதையேனும் செய்கிறேன். இந்த நிலையிலே நான் 'நான் ஆக' இருக்க முடிகிறது; எனக்காக, என் மனம்போல் நாட்களைக் கழிக்க முடிகிறது. புகழ்பெற்ற 'கொம்பர்' ஆகிவிட்டால் நான் மற்றவர்களை மகிழ்விக்க வேண்டிய தேவை எழும்; பிறர் மெச்ச வேண்டும் என விரும்பியோ, மற்றவர்கள் குறை கூறுவார்களே என அஞ்சியோ, எனக்குப் பிடிக்காத முறைகளில் நடித்து, வாழ்க்கையையே ஒரு நாடகமாக ஆக்கிக்கொள்ள நேரிடும். அத்தொல்லைகள் எவையும் சாதாரண நபரான எனக்கு இல்லவே இல்லை.

## 6-ஆம் பக்கத் தொடர்ச்சி

அடுத்து ரசிகர்கள் ஆவலுடன் எதிர்பார்த்த சொற்போர் நிகழ்ந்தது. சங்கத் துணைத் தலைவர் திரு. ரா. நீலமேகம் அவர்கள் வரவேற்க தவத்திரு. அடிகளார் தலைமையில் தமிழ் இலக்கியங்களுக்கு அடிப்படை கற்பனைச் சிறப்பா அல்லது அறப் பண்பா" என்ற தலைப்பில், கற்பனைச் சிறப்பே என்ற கட்சித் தலைவர் பேராசிரியர் திரு. M. S. நாடார் அவர்கள் எல்லா இலக்கியங்களும் கற்பனையின் விளைவே என்று விவரித்துக் கூறினார். அடுத்து அறப் பண்பே என்ற கட்சித் தலைவர் திரு C. S. கமலபதி அவர்கள் மலைக் கோட்டை இருந்தாலும் அதன் அடித்தளம் அறப் பண்பால் தான் உயர்ந்தது என்றார். அதை எதிர்த்து புலவர் மு. கணபதி அந்த மலைக்கோட்டையில் உள்ள சிற்பங்கள் எல்லாம் கற்பனையின் திருவுருவே என்றதும், திரு. சே. சத்தியசீலன் பாரதிதாசன் கவிதையை சான்றாக்கூறி அறப்பண்புக் கட்சிக்கு வலுவூட்டினார். அதை வெட்டிப் பேசிய பூமிநாதன் அவர்கள் கற்பனைச் செழிப்பினால் தான் இலக்கியம் வளருகிறது; வளர முடியும் என்றார். அறப் பண்பின் சார்பில் திரு. துரை நமசிவாயம், அறம் இல்லையேல் ஒன்றுமில்லை; எதைச்சொன்னாலும் அடிப்படையான கருத்து அறப் பண்பே என்றார். எதிர்த்து திரு. K. R. பசுபதி மிகுந்த ஆழ்ந்த கருத்துக்களை கூறினார். இரா. இராதாகிருஷ்ணன், கொஞ்சம் வேகமாக பேசினாலும் அறம் தான் அடிப்படை என்று வலியுறுத்தினார். வித்துவான் வி. து. தயாளசாமி அவர்கள் மிகுந்த நகைச் சுவையுடன் மொழி என்பதே கற்பனை தானே என்று ஒரு புதிய திருப்பத்தை உண்டாக்கினார். திரு. இலஞ்சி முத்துக்குமாரசாமி அவர்கள் நல்லறம் என்பதை வைத்துத் தான் இலக்கியம் உண்டாகியுள்ளது என்றார். அடுத்து இறுதி வாதமாக திரு. M. S. நாடார் அவர்களும், திரு. C. S. கமலபதி அவர்களும் தங்கள் தங்கள் கட்சியை வலியுறுத்தினர் இறுதியில்தலைவர் தவதிரு. அடிகளார் அவர்கள் இரு கட்சியினரின் வாதத்தை விரிவாக தொகுத்துச் சொல்லி, கற்பனை எவ்வளவு இருந்தாலும், சிறப்பாக அமைந்தாலும் தமிழ் இலக்கியங்களுக்கு அடிப்படை அறப் பண்பே என்று தீர்ப்பளித்தவுடன் தேவர் மன்றமே அதிரும்படி கரகோஷித்தனர். இந்த நிகழ்ச்சி ஆரம்பிப்பதற்கு முன் திரு. திருலோக சீதாராம் அவர்கள் பங்கு கொள்ளும் அறிஞர்களுக்கும் தலைவர் அவர்களுக்கும் பட்டாடை போர்த்தி கௌரவப்படுத்தினார். துணைச் செயலாளர் திரு. T. L. பஞ்சாபகேசன் நன்றி நவில விழா நாட்டு வாழ்த்துடன் சுமார் 9 மணிக்கு இனிது முடிவடைந்தது.

குழுமியிருந்த செம்மல்களுக்கும், விழாவில் பங்குகொண்ட சிந்தனையாளர்களுக்கும், விழாவை சிறப்புற நடத்த உதவிய எழுத்தாள அன்பர்களுக்கும், எங்கள் தலைவருக்கும், விழாவை நன்கு ஒலிப்பதிவாக்கி, வானொலியில் ஒலிபரப்பிய திருச்சி வானொலி நிலையத்தினருக்கும், மழையில்லாது தடுத்தாண்டு கொண்ட இறைவன் தாயுமானவருக்கும் எங்கள் அஞ்சலிகள்.

வாழ்க தமிழர்!!

வெல்க அவர்கள் திறம்!!

"எழுத்தாளன்"
(மாத இதழ்)
ஆண்டுமலர் உள்பட
வருட சந்தா ரூ 3—00
தனிப்பிரதி 25 பைசா
சிறப்பு மலர் தனி.
விபரங்களுக்கு: நிர்வாகி,
"எழுத்தாளன்"
24, தேரடிக்கடைத் தெரு,
திருச்சி-2.

Edited & Published by the owner A V R. Krishnaswamy Reddiar & Printed by him at his Kannan Press, 24, Theradi Bazaar, Tiruchirappalli-. Asst. Editor: T. L. Panchapakesan.